மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அர்ச்சகர்கள் "சுக்கலாம் பரதரம்" என்ற மந்திரங்களைச் சொல்ல வேண்டும். அவைகளிலே தேர்ச்சி பெறவேண்டும்.

திரு. எஸ். வடிவேல் : "சுக்கலாம்பரதரம்" என்ற மந்திரங்களைச் சொல்லத் தெரியாவிட்டாலும் உள்ளத்திலே நல்ல ஒளி உள்ளவர்கள், நல்ல உள்ளம் படைத்தவர்கள்தான் இதற்குத் தேவை. ஆகவே, அப்படி இருந்தால் இதிலிருந்து அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எல்லோரும் அர்ச்சகர்களாக ஆகலாம் என்ற அளவுக்கு அரசியல் சட்டம் வழி வகுத்துத் தருமானால் அதற்குப் பிறகு மந்திரங்கள் எதிலே இருப்பது என்று ஆராயலாம். இப்போதே அர்ச்சனை செய்யும்போது தமிழிலே ஆண்டவனை வழிபாடு செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். நடைமுறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் சில இடங்களில் அரிசனங்கள் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் உள்ளூர் தேவதைகள், காளிகோயில், மாரி கோயில் போன்ற அப்படிப்பட்ட கோயில்களில்தான் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள். நான் சொல்லுவது—மற்ற சாதிக்காரர்களே தான் அர்ச்சகர்களாக இருக்க வேண்டுமென்ற சம்பிரதாயத்தையும், சமுதாயக் கொடுமையையும் எப்படியாவது தகர்த்து யாராக இருந்தாலும் அர்ச்சனை செய்ய அனுமதிக்கப்பட வேண்டுமென்றுதான் இந்த அரசு கருதுகிறது.

Senthangudi Sankara Mutt

490*—*Q.* THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(a) whether it is a fact that idols were stolen recently from Senthangudi Sri Sankara Mutt on the northern banks of the Cauvery near Thulaghat; and

(*b*) whether the theft was reported to the Mayuram Town Police by the Trustees of the Mutt?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

திரு. என். கே. பழனிசாமி : எத்தனை விக்கிரகங்கள் திருட்டுப் போயின ? மதிப்பு என்ன ? எவ்வாறு பிடிக்கப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இரண்டு சிலைகள் திருட்டுப் போயின. அவற்றின் மதிப்பு சுமார் 50,000 ரூபாய் இருக்குமென்று கருதப்படுகிறது. இந்தக் கோயில் அறநிலையத் துறையின் ஆளுகையில் வராத கோயிலாகும். கோயிலின் பாரம்பரை அறங்காவலர்கள் இந்தத் தகவல் தெரிந்தவுடன் சம்பந்தப்பட்ட மாயவரம் நகரக் காவல் நிலையத்தில் புகார் ஒன்றைக் கொடுத்துள்ளார்கள். இதுவரை திருட்டுச் சம்பந்தமாக யாரையும் கண்டு பிடிக்கவில்லை.

1975 மார்ச் 29]

திரு. கே.டி.கே. தங்கமணி : இது 50,000 ரூபாய் பெறுமானம் என்று சொல்கிறார்கள். ஏற்கெனவே, ஒரு கோடி ரூபாய் பெறுமான முள்ள சிவபுரம் சிலை ஒன்று அமெரிக்காவில் இருக்கிறது என்று சொல்லுகிறார்களே, அது கிடைக்க அரசு என்ன ஏற்பாடு செய்திருக் கிறது ? இந்த 50,000 ரூபாய் பெறுமானமுள்ள சிலைகள் வெளிநாட்டுக்குப் போகாமல் இருக்கத் தடை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சிவபுரம் நடராஜர் சிலையை மீட்டுக்கொண்டு வர நம்முடைய அரசாங்கம் முயற்சிகளை எடுத்துக் கொண்டு மத்திய அரசாங்கத்தின் மூலமாக நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த வழக்கு முடிந்து நிச்சயமாக அந்தச் சிலை தமிழ் நாட்டுக்கு வந்து சேரும் என்ற நம்பிக்கையோடு வாதாடிக் கொண்டிருக்கிறோம். இப்போது திருட்டுப் போன சிலையைப் பொறுத்த வரை காவல் துறையினரிடத்தில் புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஆய்ந்து வருகிறார்கள். இதுவரை துப்புகள் கண்டு பிடிக்கப்படவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : சிவபுரத்தில் இருந்து திருடிச் சென்ற சிலைபற்றி இப்போது லாஸ் ஏஞ்சல்சில் கோர்ட் நீதிபதி இது போன்ற வழக்கு இங்கிலாந்தில் நடப்பதாகவும்; அதன் முடிவை எதிர் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் கூறுகிறார்கள். அது சாதகமாக இல்லா விட்டால் அந்தச் சிலையைப் பெற நம்முடைய அரசு மத்திய அரசோடு என்ன முயற்சிகளை மேற்கொள்ளப்போகிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேல் நடக்கப்போவதைப் பற்றி "சாதகமாக இல்லா விட்டால்" என்ற முறையில் கேள்வி கேட்பது சரியல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சாதகமாக அமையும் என்று நாம் எதிர்பார்ப்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.

(2) ஒத்திவைப்புத் தீர்மானம்.—

கொள்முதல் அதிகாரிகளின் அத்துமீறிய நடவடிக்கைகளை எதிர்த்து தஞ்சை மாவட்ட விவசாயிகளின் உண்ணாவிரதம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே, ஜேம்ஸ் ஆகிய இருவரும்—

"the serious situation arising out of the five day fast undertaken by the farmers of Thanjavur District in protest of the coercive measures adopted by the procurement officials"